MALAAI MALAR

PAGE NO: 3 DATE: 11.12.2023




புதுவை கவர்னர் மாளிகையில் பிரதமர் மோடி கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒளிபரப்பை புதுவை கல்வியாளர்கள் ஆர்வமுடன் கேட்ட காட்சி.

### புதுவை கவர்னர் மாளிகையில்

# கல்வியாளர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒளிபரப்பு

புதுச்சேரி,டிச.11— பிரதமர் மோடி "வளர்ச்சியடைந்த பாரதம் 2047—இளைஞர்களின் குரல்" நிகழ்ச்சியை காணொளி வாயிலாக தொடங்கி வைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி கவர்னர் மாளிகையில் இன்று ஒளிபரப்பப்பட்டது

கவர்னர் தமிழிசை ஐதாராபாத்தில் இருந்து காணொளி வாயிலாக நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பிரதமரின் உரையைத் தொடர்ந்து "வளர்ச்சியடைந்த பாரதம் 2047—இளைஞர்களின் குரல நிகழ்ச்சி குறித்த கல்வியா . ளர்களின் கலந்துரை யாடல் நடைபெற்றது.

**கல்வியாளர்கள்**

உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையின் இயக்குநர் அமன் சர்மா, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால், புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) டாக்டர் தரணிக்கரசு, புதுவை தொழில்நுட்ப கல்லூரியின் துணை வேந்தர் டாக்டர் மோகன், தேசிய தொழில்நுட்பக் கல்லூரியின் பதிவாளர் சுந்தரவரதன், காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மைய இயக்குநர் டாக்டர் செல்வராஜ், பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ராஜி சுகுமார், மணக்குள விநாயகர் கல்லூரியின் இயக்குநர் டாக்டர் வெங்கடாசலபதி, ஸ்ரீ லட்சுமி நாராயணா மருத்துவக் கல்லூரியின் இயக்குனர் டாக்டர் பாலகுருநாதன் உள்ளிட்ட மூத்த கல்வியாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.